## 2. வினாக்கள்—விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள். வினா எண் 501, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

501—

### ப்ளஸ்-2 கேள்வித் தாள்கள்.

*20375—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ப்ளஸ்-2 கேள்வித் தாள்கள் தேர்வு நடப்பதற்கு முன்பே வெளியானது பற்றி அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இது தொடர்பாக அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நடந்து முடிந்த மேல் நிலைத் தேர்வுகளைப்பொறுத்த மட்டில் வினாத்தாட்கள் வெளியான சம்பவம் பற்றிய தகவல் ஏதும் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் நடைபெற்ற ப்ளஸ்—2 தேர்வு நடப்பதற்கு முன்னதாகவே கேள்வித் தாள்கள் வெளிவந்து விட்டன. வெளி வந்த கேள்வித்தாள்கள் ஜெராக்ஸ் எடுத்து சாதாரணமாக 100 ரூபாய் என்ற அளவில் விற்கப்பட்டுள்ளன. வெளியான கேள்வித் தாள்களை எடுத்துக் கொண்டு மாணவர்கள் வீடுகளுக்கே சென்று விற்பனை செய்துள்ளார்கள். இதன் காரணமாக நல்ல முறையில் படிக்கின்ற மாணவர்கள் குறைந்த மார்க்குகளையும் படிக்காத மாணவர்கள் அதிக மார்க்குகளையும் பெறுவதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டு விட்டன. மருத்துவக் கல்லூரி என்ஜினியரிங் கல்லூரிகளில் கெட்டிக்காரத்தனமாகப் படிக்கின்ற மாணவர்கள் சேர்வதற்கான வாய்ப்பு இதனால் குறைந்துள்ளது. இதைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : பேரவைத் தலைவர் அவர்களே, வினாத்தாள் வெளியாகிவிட்டது என்ற ஒரு புகார் வருகின்றபோது பரிட்சை நடக்கும். பரிட்சை

நடந்த நேரத்தில், நாம் தருகின்ற வினாத்தாளும், அதுவும் ஒன்றாக இருக்குமேயானால் உடனடியாக பெற்றோர்கள், ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் மற்றவர்கள் எல்லாம் புகார் செய்வார்கள். அந்த நிலையிலே தான் அரசு விசாரித்து நடவடிக்கை எடுக்க வேண்டி வருகிறது. ஆனால் இதுவரையிலும் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக தமிழ் நாட்டிலே எந்தப் பகுதியிலேயிருந்தும் அரசுக்குத் தகவல் இல்லை.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் முழுவதிலும் இந்தத் தேர்வு நடப்பதற்கு முன்னதாகவே கேள்வித் தாள்கள் வெளியாகி ஜெராக்ஸ் காப்பி பல மாணவர்களுக்கு விற்கப்பட்டுள்ளது. அது அரசின் கவனத்திற்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். இனி மேலும் இது போன்ற தவறுகள் நடக்காத வண்ணம் பார்த்துக் கொள்ளுமாறும், இது போன்ற தவறுகள் நடக்கின்ற போது, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற தவறுகள் நடைபெறக் கூடாது என்பதுதான் அரசினுடைய நோக்கமாகும். அந்த அடிப்படையில்தான் நாம் இந்தப் பொறுப்பை ஏற்று நிறைவேற்றி வருகிறோம். அப்படி யாராவது தவறு செய்வார்களேயானால் நிச்சயமாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற வினாத்தாள், போலி வினாத்தாளாக இருக்கலாம். ஆகவேதான் எங்களுக்கு எந்தவிதமான தகவலும் வரவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது ஒரு இடத்தில் வினாத்தாள்கள் வெளியாகியிருந்தால் அந்த மாணவனுக்கு உடனடியாகத்தெரிந்து வேறு வினாத்தாள்கள் அடுத்த குவஸ்ட்டின் பேப்பர் கொடுப்பதற்கு அரசு ஏதாவது முயற்சி எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி வெளியானால்தான் அதிலே என்ன செய்வது என்பதைப் பற்றி, எவ்வளவு பேர் அதிலே பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அரசு நடவடிக்கை எடுக்க முடியுமே தவிர இன்றைய நிலையில் அப்படி வெளியாகவில்லை என்பது தான் அரசினுடைய நிலையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் பிட்ரிக்ஸ் டி'சோசா.

DR. BEATRIX D'SOUZA : Hon. Speaker Sir, apart from reports of papers being leaked out, this year, according to the Association of Heads of Schools—S.S.L.C. Schools and Higher Secondary Schools,—the questions themselves were very obscure and ambiguous in Mathematics, English and Social studies. Also, according to reports, a social worker has claimed that cyclostyled answers to the leaked question papers were smuggled into the examination hall. In fact, the whole examination system has become a kind of obstacle race and the final hurdle is their evalution which is so erratic that very often the students fail by a very narrow margin. I would like to know whether the Hon. Minister would consider, after computerisation of marks, whether students should not be allowed to fail by a margin below 5 marks. Sometimes they fail by 2 marks.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்வு சம்பந்தமாக எல்லா பிரச்சினைகளையும் தொகுத்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக கேள்வித்தாள் ஏதேனும் கடுமையான கேள்வியாகவோ, அல்லது சிலபசுக்கு அப்பாற்பட்ட கேள்வியாகவோ கேட்கப்பட்டிருக்குமேயானால் அதைஎல்லாம் திருத்துகின்றபோது கவனத்தில் எடுத்து மார்க் தரவேண்டுமென்ற ஒரு முறையை நம் தேர்வுத்துறை பின்பற்றி வருகிறது. மற்றபடி ஏதேனும் தவறு செய்து இருப்பார்களேயானால் அந்த புகார் வரும்போது அந்தப் புகாரின் அடிப்படையில் விசாரித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மற்றபடி எந்தவிதமான தவறும் நிகழக் கூடாது என்பதில் அரசு கவனமாக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 502, திரு. கி. தருமலிங்கம், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

502—

## கிண்டி தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் பணிபுரியும் தற்காலிகப் பட்டதாரி அட்டவணையாளர்கள்.

* 20542—திரு. கி. தருமலிங்கம் :

மாண்புமிகு கல்விஅமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

கிண்டியிலுள்ள தொழில்நுட்பக் கல்வி இயக்ககத்தில் உள்ள தேர்வுப் பிரிவில் தற்காலிகமாகப் பணிபுரியும் பட்டதாரி அட்டவணையாளர்களின் பணியை நிரந்தரப்படுத்த அரசு ஆவன செய்யுமா ?